# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 49/மா/2025

**நாள்: 17.03.2026**

இரா. கிரிஷ்டி,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–10
பெருநகர சென்னை மாநகராட்சி.

(2) K.S. அகடாமி, சென்னை --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 024, கோடம்பாக்கம், வரதப்பன் தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. கிரிஷ்டி என்பவரின் 31.12.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 31.12.2024 அன்று பெறப்பட்டு 49/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 024, கோடம்பாக்கம், வரதப்பன் தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. கிரிஷ்டி என்பவர் தனது 31.12.2024 நாளிட்ட மனுவில் இணைத்துள்ள மத்திய வட்டார ஆணையர் அலுவலகம், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையருக்கு முகவரியிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "நான் வசிக்கும் வீட்டிலிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் கதவு எண்.12/2, கார்ப்ரேஷன் காலனி மெயின் ரோடு, சக்கரபாணி தெரு Ext., கோடம்பாக்கம், சென்னை–24 என்ற முகவரியில் நான்குபுற இடைவெளி இல்லாமல் பார்க்கிங் வசதி இல்லாமல் தளம் ஒன்றுக்கு சுமார் 10,000 சதுர அடி என நான்கு தளத்தில் வணிக கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 3 மாதத்துக்கு முன் K.S.அகடாமி என்கின்ற கல்லூரி துவக்கப்பட்டது. இக்கட்டிடம் துவக்கப்பட்டபின் மனுதாரராகிய நான் தினமும் அச்சாலையில் செல்லும்போது கட்டிடத்தை சுற்றி இரு புற சாலைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களை மற்றும் கனரக வாகனங்களை நடுச்சாலையில் நிறுத்தி கடுமையான போக்குவரத்து நெரிசல் தொடர்ந்து ஏற்படுவதால் சென்ற வாரம் கட்டிடம் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு கட்டப்பட்டதா என்று மனுதாரராகிய நான் பார்த்த போது, கட்டிடத்தைச் சுற்றி நான்குபுற இடைவெளிகள் இல்லை தரைத்தளத்தில் முழுமையாக கேண்டின் இயங்கி வருகிறது. கட்டிடத்தின் முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதை மற்றும் மழை நீர் கால்வாய் தார் சாலை ஆக்கிரமித்து இரும்பு பைப்புகளால் கைப்பிடிகள் அமைத்து சுமார் 20 அடி அகலம் 50 அடி நீளத்தில் கான்கீரிட்டால் ஸ்டெப்ஸ் மற்றும் ரேம்ப்கள் அமைத்துள்ளதை

கண்டு எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இம்மனுவுடன் இணைப்பு இதுபோல் ஆக்கிரமிப்பால் பாதசாரிகள் நடைப்பாதையை பயன்படுத்த முடியாமல் நடுச்சாலையில் நடந்து சென்று விபத்துகள் ஏற்படுவதும் இல்லாமல் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் இவ்வணிக வளாக கட்டிட காம்பௌண்ட் சுவரில் ராட்சத இரும்பு கேட்டுகள் அமைக்கப்பட்டு சுமார் 15 அடி நடைபாதையில் கேட்டை திறந்து விடுவதால் பொதுமக்கள் மீது விழுந்து உயிர் சேதங்கள் ஏற்படுமோ என்ற அச்சம் உண்டாகிறது. ஆகவே, இம்மனுவை கண்ட 7 தினங்களில் கட்டிட உரிமையாளருக்கு பார்க்கிங் வசதிகள் அமைக்க அறிவுறுத்தி நோட்டீஸ் அளித்து புகைப்பட வீடியோ ஆதாரங்களுடன் ஸ்டெப்ஸ் மற்றும் ரேம்ப் ராட்ச இரும்பு கேட் மற்றும் கைப்பிடி பைப்புகளை அகற்றி நடவடிக்கை எடுத்து பார்க்கிங் வசதிகள் அமைக்கும் வரை இக்கட்டிடத்திற்கு வழங்கிய பணி முடிவு சான்று மற்றும் கேண்டின் லைசன்சை ரத்து செய்து பதில் அளிக்க உத்தரவிடக் கோரி தன் நலன் பொது நலன் கருதி இப்புகார் மனு அளிக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 24.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் தன்னுடைய 26.03.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"திரு.கிரிஷ்டி என்பவர் அளித்த புகார் மனுவில் தெரிவித்துள்ள K S அகாடமி என பெயரில் உள்ள கட்டிடமானது அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளதாகவும், சாலை மற்றும் நடைப்பாதையை ஆக்கிரமித்து சாய்வுதளம் மற்றும் படிக்கட்டுகள் கட்டியுள்ளதாகவும் மற்றும் வாகன நிறுத்துமிடமில்லாமல் கட்டப்பட்டுள்ளதாலும் இக்கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தெரிவித்துள்ள க.எண்.12/2 கார்ப்ரேஷன் காலனி மெயின் ரோடு சக்கரபாணி தெரு Ext. கோடம்பாக்கம் சென்னை–24 என்ற முகவரி இந்த தெருவில் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் KS அகாடமி என்ற பெயரில் உள்ள கட்டித்தினை ஆய்வு மேற்கொண்டதில் அக்கட்டிடமானது கதவு பழைய எண்.13, புதிய எண்.26, கார்ப்பரேஷன் காலனி பிரதான சாலை, சக்கரபாணி தெரு விரிவு, கோடம்பாக்கம், சென்னை–600 024 என்ற முகவரியில் உள்ளது என்பதும் பெருநகர சென்னை வளர்ச்சி குழுமத்தால் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (திட்ட அனுமதி எண்.PP NO.B/NHRB/412/2020 மற்றும் B/NHRB/412/2020 நாள் 11.12.2020). மேலும், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் இக்கட்டிடத்திற்கான (Stilt+3floors) கட்டிட பணி நிறைவு சான்றிதழ் (Completion Certificate) கடந்த 31.05.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது.

வீதிகளை மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் மீது அமலாக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சுற்றறிக்கையின்படி (Circular of Member Secretary, Chennai Metropolitan Development Authority vide Proc.No.RT/19948/2011 dated 02.12.2016) மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர், மண்டலம் 10 அவர்கள் மூலம் கடந்த 13.02.2025 அன்று சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், இக்கட்டிடத்தில் சாலை மற்றும் நடைபாதையை ஆக்கிரமித்து சாலையின் இருபுறங்களிலும் கட்டப்பட்டிருந்த சாய்வுதளம் மற்றும் படிக்கட்டுகள் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் 31.01.2025 அன்று இடித்து அகற்றப்பட்டது. ஆக்கிரமிப்பு இடித்து அகற்றப்பட்ட புகைப்படம் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது. ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது தொடர்பான விவரங்கள் மனுதாரர் திரு.கிரிஷ்டி அவர்களுக்கு கடிதம் மூலம் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர் இணையதளம் மூலம் அளிக்கப்பட்டு இருந்த

புகாருக்கும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.02.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.01.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"நான் வசிக்கும் வீட்டிலிருந்து சுமார் 100 மீட்டர் தொலைவில் உள்ள கதவு எண்.12/12, கார்ப்ரேஷன் காலனி மெயின் ரோடு, சக்கரபாணி தெரு விரிவு, கோடம்பாக்கம், சென்னை–24 என்ற முகவரியில் நான்குபுற இடைவெளி இல்லாமல் பார்க்கிங் வசதி இல்லாமல் தளம் ஒன்றுக்கு சுமார் 10,000 சதுர அடி என நான்கு தளத்தில் வணிக கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 3 மாதத்துக்கு முன் M/s.K.S.அகடாமி என்கிற கல்லூரி துவக்கப்பட்டது. இக்கட்டிடத்தை சுற்றி இரு புற சாலையில் நூற்றுக்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களை மற்றும் கனரக வாகனங்களை நடுச்சாலையில் நிறுத்தி கடுமையான போக்குவரத்து நெரிசல் தொடர்ந்து ஏற்படுவதால் இக்கட்டிடம் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு கட்டப்பட்டதா என்று பார்த்த போது நான்குபுறமும் இடைவெளிகள் இல்லை. தரைத்தளத்தில் முழுமையான கேண்டின் இயங்கி வருகிறது. கட்டிடத்தின் முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதை மற்றும் மழை நீர் கால்வாய் ஆகியவற்றை ஆக்கிரமித்து இரும்பு பைப்புகளால் கைப்பிடிகள் அமைத்து சுமார் 20 அடி அகலம் 50 அடி நீளத்தில் கான்கீரிட்டினால் ஆன ஸ்டெப்ஸ் மற்றும் ரேம்ப்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆக்கிரமிப்பால் பாதசாரிகள் நடைப்பாதையை பயன்படுத்த முடியாமல் நடுச்சாலையில் நடந்து சென்று விபத்துகள் ஏற்படுவதும், அதிக போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகிறது. மேலும் இவ்வணிக வளாக கட்டிட காம்பௌண்ட் சுவரில் ராட்சத இரும்பு கேட்டுகள் அமைக்கப்பட்டு சுமார் 15 அடி நடைபாதையில் கேட்டை திறந்து விடுவதால் பொதுமக்கள் மீது விழுந்து உயிர் சேதங்கள் ஏற்படுமோ என்ற அச்சம் உண்டாகிறது. எனவே, இக்கட்டிடத்தில் பார்க்கிங் வசதிகள் ஏற்படுத்தவும் ஸ்டெப்ஸ் மற்றும் ரேம்ப் ராட்சித இரும்பு கேட் மற்றும் கைப்பிடி பைப்புகளை அகற்றி நடவடிக்கை எடுக்கவும், இக்கட்டிடத்திற்கு வழங்கிய பணி முடிப்பு சான்று மற்றும் கேண்டின் லைசன்சை ரத்து செய்யுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு பணிவுடன் இம்முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் சார்பாக உதவிப் பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 06.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"M/s.K.S. அகடாமிற்கு முன் உள்ள சாலை மற்றும் நடைபாதை ஆக்கிரமித்து சாலையின் இருபுறங்களிலும் கட்டப்பட்டிருந்த சாய்வு தளம் மற்றும் படிக்கட்டுகள் 31.03.2025 அன்று அகற்றப்பட்டது. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் இக்கட்டிடத்திற்கான வரைபட அனுமதி (திட்ட அனுமதி எண் PP No.B/NHRB/412/2020 மற்றும் B/NHRB/412/2020, நாள் 11.12.2020 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் இக்கட்டிடத்திற்கான (Stilt + 3 floors) கட்டிட பணி நிறைவு சான்றிதழ் (Completion Certificate) கடந்த 31.05.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தற்காலிகமாக அமைத்துள்ள இரும்பு படிக்கட்டுகள் மற்றும் நடைபாதையின் மீது அமைத்துள்ள (Paver Blocks) டைல்ஸ் அகற்றவும், கட்டிடம் கட்டியதில் விதி மீறல் இருக்கும் பட்சத்தில் அதற்குரிய சட்ட ரீதியான நடவடிக்கையும், மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரரான K.S. அகாடமி சார்பாக மேலாளர் திரு. க. கலையரசு என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 06.02.2026 அன்று

நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10ன் உதவிப்பொறியாளர் Ramp கூடாது என்று கூறி பக்கவாட்டில் முழுவதுமாக எடுத்துள்ளார்கள். தற்போது இரும்புபடிகள் மட்டும் உள்ளது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டதுள்ளது போல் பேரூந்துகள் வருவது இல்லை. அதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதில்லை. மேலும் நடைபாதை பாதசாரிகள் நடந்து செல்வதற்கு எந்த தடையும் இல்லை என்று இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை, உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் K.S. அகாடமி–ன் உரிமையாளர் சார்பாக மேலாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

“சென்னை–24, கோடம்பாக்கம், சக்கரபாணி தெரு விரிவு, கார்ப்ரேஷன் காலனி மெயின் ரோடு, கதவு எண்.12/12 என்ற முகவரியில், நான்குபுற இடைவெளி மற்றும் பார்க்கிங் வசதி இல்லாமல் ஒவ்வொரு தளமும் 10,000 சதுர அடியில் நான்கு தளம் கொண்ட வணிக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதும், அக்கட்டிடத்தில் M/s.K.S.அகடாமி என்கிற கல்லூரி துவக்கப்பட்ட, இக்கட்டிடத்தை சுற்றி இரு புற சாலையிலும் நூற்றுக்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் நடுச்சாலையில் நிறுத்துவதினாலும், இக்கட்டிடத்தின் முன்பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதை மற்றும் மழை நீர் கால்வாய் ஆகியவற்றை ஆக்கிரமித்து இரும்பு பைப்புகளால் கைப்பிடிகள் அமைத்து கான்கீரிட்டினால் ஆன ஸ்டெப்ஸ் மற்றும் ரேம்ப்கள் அமைக்கப்பட்டுள்ளதால், பாதசாரிகள் நடைப்பாதையை பயன்படுத்த முடியாமல் நடுச்சாலையில் நடந்து செல்ல வேண்டியுள்ளதால், விபத்துகள் மற்றும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது என்பதும், தரைத்தளத்தில் முழுமையான கேண்டின் இயங்கி வருகிறது என்பதும், இவ்வணிக வளாக கட்டிட காம்பௌண்ட் சுவரில் ராட்சத இரும்பு கேட்டுகள் அமைக்கப்பட்டு சுமார் 15 அடி நடைபாதையில் கேட்டை திறந்து விடுவதால் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்பதும், எனவே, இக்கட்டிடத்தில் பார்க்கிங் வசதிகள் ஏற்படுத்துவதற்கும், ஸ்டெப்ஸ் மற்றும் ரேம்ப், ராட்சத இரும்பு கேட் மற்றும் கைப்பிடி பைப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்கவும், இக்கட்டிடத்திற்கு வழங்கிய பணி முடிவு சான்று மற்றும் கேண்டின் லைசன்சை ரத்து செய்ய பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் புகார் தொடர்பாக M/s.K.S. அகடாமிற்கு முன் உள்ள சாலை மற்றும் நடைபாதை ஆக்கிரமித்து சாலையின் இருபுறங்களிலும் கட்டப்பட்டிருந்த சாய்வு தளம் மற்றும் படிக்கட்டுகள் அகற்றப்பட்டது என்பதும், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் இக்கட்டிடத்திற்கான வரைபட அனுமதி (திட்ட அனுமதி எண் PP No.B/NHRB/412/2020 மற்றும் B/NHRB/412/2020, நாள் 11.12.2020 அன்று வழங்கப்பட்டு, அக்குழுமத்தின் மூலம் இக்கட்டிடத்திற்கான (Stilt + 3 floors) கட்டிட பணி நிறைவு சான்றிதழ் (Completion Certificate) கடந்த 31.05.2024 அன்று வழங்கப்பட்டுள்ளது என்பதும், மீதமுள்ள தற்காலிகமாக அமைத்துள்ள இரும்பு படிக்கட்டுகள் மற்றும் நடைபாதையின் மீது அமைத்துள்ள (Paver Blocks) டைல்ஸ் அகற்றவும், கட்டிடம் கட்டியதில் விதி மீறல் இருக்கும் பட்சத்தில் அதற்குரிய சட்ட ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

தங்கள் நிறுவனத்தின் முன் உள்ள Ramp முழுமையாக எடுத்து விட்டார்கள் என்பதும், இரும்பு படிகள் மட்டும் உள்ளது என்பதும், பேருந்துகள் எங்கள் தெருவில் வருவது இல்லை என்பதால் போக்குவரத்து நெரிசல் இல்லை என்பதும், நடைபாதையில் பாதசாரிகள் நடப்பதற்கு எவ்வித தடையும் இல்லை என்பதும், இரண்டாம் எதிர்மனுதாரரான M/s.K.S. அகாடமி சார்பாக ஆஜரான அதன் மேலாளரின் வாக்குமூலத்தின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள, மேற்கண்ட கட்டிடத்தில் தற்காலிகமாக அமைத்துள்ள இரும்பு படிக்கட்டுகள் மற்றும் நடைபாதையின் மீது அமைத்துள்ள (Paver Blocks) டைல்ஸ் அகற்றவும் மற்றும் கட்டிடம் கட்டியதில் விதி மீறல் இருக்கும் பட்சத்தில் அதற்குரிய சட்ட ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் உதவிப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட கட்டிடத்தினை மண்டல அலுவலர் கள ஆய்வு செய்து தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019–ன்படி அமைந்துள்ளதா என்பதை கண்டறிந்து, அதனடிப்படையில் உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளவும், நடைபாதையில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை என்பதை உறுதி செய்திடவும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. இரா. கிரிஷ்டி,
கதவு எண் 1, வரதப்பன் தெரு,
கோடம்பாக்கம், சென்னை–600 024.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 10, பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 64 N.S.K. சாலை, கோடம்பாக்கம், சென்னை–600 024.

(4) M/s.K.S. அகாடமி, பழைய எண் 13, புதிய எண் 24,
கார்ப்பரேஷன் காலனி பிரதான சாலை,
சக்கரபாணி தெரு விரிவு, கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை–600 032

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

20/3/26
செயலாளர்.

20/3/26